பக்கங்கள் - 20

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 07 திங்கட்கிழமை 22.12.2025 | அதிர்வு 144

## ஜப்பான் மீண்டது போல் இலங்கையும் மீண்டெழும்

*அமைச்சர் சமந்த நம்பிக்கை*



"உலகப் போரின் போது ஜப்பான் மீது அணுகுண்டு வீசப்பட்டது. முற்றாக அழிந்த அந்த நாடு மீண் டெழுந்தது.

06



# பொறுப்புகளை நிறைவேற்றினாலே நாடு முன்னேறும்!

## ஜனாதிபதி அநுர 'அட்வைஸ்'

**ஒருவரையொருவர் சந்தேகத்துடனும் அவநம்பிக் கையுடனும் பார்ப்பதற்குப் பதிலாக, எந்தவொரு சவா லையும் எதிர்கொண்டு, உறுதியுடனும், ஒரே நோக் கத்துடனும், நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றும்போதே ஒரு நாடாக நாம் முன்**

04

தையிட்டியில் அமைந்துள்ள

## திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

*அமைச்சர் வாக்குறுதி*



யாழ்ப்பாணம், தையிட்டியில் அமைந் துள்ள திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று புத்தசாசன மற்றும் கலாசார விவகார அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

தையிட்டி விகாரைக்கு எதிரான நேற் றைய போராட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. இது தொடர்பில் ஊடகங்களி டம் கருத்துரைக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச் சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத் துள்ளோம்.

திஸ்ஸ விகாரையின் விகாராதிப திக்குப் பௌத்த கலாசாரத்தின் அடிப் படையில் வழங்கப்படும் சான்

04

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஊழல், மோசடிக்கு இடமே இல்லை!

## கிளிநொச்சி நிகழ்வில் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

"எமது தேசிய மக்கள் சக்தி அரசாங் கம் ஜனாதிபதி நிதியத்தை முற்று முழுதாக வறிய மக்களின் நலனுக் காகவே பயன்படுத்தும். இந்த அரசாங் கத்தில் ஊழல், மோசடிக்கு இடமே இல்லை."

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தால் நடைமுறைப் படுத்தப்படும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட் சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் விசேட வேலைத்திட்டத்தின் இந்த ஆண்டுக்கான இறுதி நிகழ்வு, நேற்று ஞாயிற்

03






இன்று கொழும்புக்கு வருகின்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நாளை தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை ஒன்றாகச் சந்திக்கின்றார்.

ஏற்கனவே கடந்த ஏப்ரலில் இலங்கைக்கு வந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யுடன் மேற்கொண்ட தமிழ்க் கட்சிகளின் சந்திப்பின் தொடராக இம்முறை இந்திய வெளிவிவகார அமைச்சருடன் இந்தச் சந்திப்பு இடம் பெற இருப்பதாக இந்தியத் தூதரகம் கோடிகாட்டி இருக்கிறது.

நரேந்திர மோடியைச் சந்தித்த அணியில் தமிழரசுக் கட்சியின் நான்கு பேர் (தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரன் மற்றும் சாணக்கியன்), தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இரண்டு தலைவர்கள் (செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்த்தன்) ஆகியோரோடு கஜேந் திரகுமார் பொன்னம்பலமும்

06



# வடக்கு விவசாயத்தின் உயிர்நாடியாகத் திகழும் இரணைமடுக் குளத்தைப் பார்வையிட்ட பிரதமர்

வடக்கு மாகாண விவசாயத்தின் உயிர்நாடியாகத் திகழும் இரணைமடுக் குளத்தைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நேரில் சென்று பார்வையிட்டார்.

நேற்று காலை கிளிநொச்சியில் நடைபெற்ற ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர், அதனைத் தொடர்ந்து மதிய வேளையில் இரணைமடுக் குளத்துக்குப் பயணம் மேற்கொண்டார். இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் துறைசார் அதிகாரிகளுடன் குளத்தின் நீர் முகாமைத்துவம் மற்றும் பயன்பாடு குறித்து விரிவான கலந்துரையாடலில் பிரதமர் ஈடுபட்டார்.

இரணைமடுக் குளத்தின் நீரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சிறுபோக மற்றும் பெரும்போக பயிர்ச்செய்கைகள் குறித்தும், விவசாயிகளின் நீர்த் தேவைகள் குறித்தும் பிரதமர் கேட்டறிந்தார்.

அத்துடன், குளத்தை நம்பி மேற்கொள்ளப்படும் நன்னீர் மீன்பிடித் தொழில் மற்றும் மீனவர்களின் வாழ்வாதார நிலைமைகள் குறித்தும் அவர் அதிகாரிகளிடம் விளக்கமாகக் கேட்டறிந்து கொண்டார்.



அண்மையில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை மற்றும் வெள்ள அனர்த்தங்களின் போது குளத்தின் பாதுகாப்பு குறித்தும், நீர் முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவசர நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் அதிகாரிகளிடம் விலாவாரியாகக் கேட்டறிந்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான பேரிடர்களை எதிர்கொள்வதற்கான தயார்நிலைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் குடிதண்ணீர் தட்டுப்பாடு தொடர்பில் பிரதமர் விசேட கவனம் செலுத்தினார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும், எதிர்காலத்தில் முன்மொழியப்பட்டுள்ள புதிய திட்டங்கள் குறித்தும் அவர் அதிகாரிகளுடன் ஆலோசனைகளை மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தின் போது, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்தன, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் கௌரவ உபாலி சமரசிங்க, கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், வடக்கு மாகாண நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் இரணைமடுக் குளத்துக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பிரதமருடன் இணைந்திருந்தனர்.









## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கிழமை கிளிநொச்சி இரணைமடுவிலுள்ள "நெலும் பியச" கலையரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 2023/2024 கல்வியாண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக ஒவ்வொரு பாடப் பிரிவிலும் அதியுயர் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதற்கமைய, வடக்கு மாகாணத்தில் சாதனை படைத்த 274 மாணவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நிதியுதவிக் காசோலைகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் இந்த நிகழ்வின் போது உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன.

கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களை ஊக்குவிப்பதும், பொருளாதார ரீதியில் பின்தங்கிய திறமைசாலி மாணவர்களுக்குக் கைகொடுப்பதுமே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்த நிகழ்வில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் இ.சந்திரசேகரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீபவானந்தராஜா மற்றும் க.இளங்குமரன் ஆகியோரும், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகளும், பெருமளவான மாணவர்களும் பெற்றோர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.
















## பொறுப்புகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னோக்கிச் செல்ல முடியும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியாகவும் அரசாங்கமாகவும் நமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளையும், மதங்கள் என்ற வகையில் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளையும், மக்கள் மற்றும் பாதுகாப்புப் படைகள் என்ற வகையில் நமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளையும் முறையாக நிறைவேற்றுவதன் மூலம், வரலாற்றில் நமக்கு இருந்த பெருமை மற்றும் கௌரவத்துடன் தாய்நாட்டை மீண்டும் விரைவாக கட்டியெழுப்ப முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம் என்றும் அழைப்பு விடுத்தார்.

நேற்று தியத்தலாவ இலங்கை இராணுவ கல்வியியல் கல்லூரியின் கெடட் அதிகாரிகள் விடுகை அணிவகுப்பு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

நமது நாடு ஒரு சிறந்த பாரம்பரியத்தையும் வெற்றிகளையும் பெற்றிருந்தாலும், கடந்த சில தசாப்தங்களாக நாடு அனைத்து வகையான வீழ்ச்சிகளுக்கும் உள்ளாகியுள்ளது என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, இன்று அனைவருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு, தாய்நாட்டை மீண்டும் உலகில் மதிப்புமிக்க மற்றும் பாராட்டப்படும் ஒரு நாடாக மாற்றுவதாகும் என்று தெரிவித்தார்.

ஓர் அரசாங்கமாகவும் ஜனாதிபதியாகவும் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை, நாட்டின் வளர்ச்சிக்காக முழுமையாகப் பயன்படுத்துவேன் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், அதற்கு தேவையான பொறிமுறைகளைத் தயாரிப்பதற்கும், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதற்கும், அரசியலை மக்களின் செல்வத்தை குவிக்கும் தொழிலிலிருந்து, பொதுமக்களுக்கு சேவை செய்யும் சமூகப் பணியாக மாற்றுவதற்கும் அரசாங்கம் தனது பொறுப்பை நிறைவேற்றி வருவதாகவும் இங்கு தெரவித்தார்.

நேற்று முற்பகல் தியத்தலாவ, இராணுவக் கல்வியியல் கல்லூரிக்கு வருகை தந்த முப்படைகளின் தளபதி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கெடட் உத்தியோகத்தர்களின் விடுகை அணிவகுப்பைப் பார்வையிட்டதுடன், திறமை வாய்ந்த கெடட் அணிக்கு விருதையும், கெடட் வீரர்களுக்கு கௌரவ சின்னங்களையும், ஒவ்வொரு பாடநெறியிலும் முதலிடம் பெற்ற அதிகாரிகளுக்கு விருதுகளையும் வழங்கினார்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் நாட்டுக்கும் மக்களுக்கும் இராணுவம் ஆற்றிய சேவை பாராட்டத்தக்கது என்று கூறினார்.

அண்மைய சூறாவளியின் போது மக்களை மீட்டெடுத்தல் மற்றும் அவர்களுக்கான வசதிகளை வழங்குவதில் இராணுவத்தினர் ஆற்றிய சிறந்த பணிக்கு நன்றியையும் தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க,

"கெடட் உத்தியோகத்தர்களாக தியத்தலாவ இராணுவ கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பெற்ற நீங்கள், இன்று அதிகாரிகளாக மாறியுள்ளீர்கள்.

இது உங்கள் வாழ்க்கையில் ஒரு சிறப்பு சந்தர்ப்பமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். உங்கள் தொழில் வாழ்க்கை முன்னோக்கி செல்ல, மேலும் எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் அடைய வாழ்த்துகின்றேன்.

உங்கள் பெற்றோர் இந்த தருணத்தில் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். சிறு வயதிலிருந்தே, அவர்கள் தங்கள் குழந்தைக்கு நல்ல எதிர்காலம் அமைய வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கின்றார்கள். இன்று, அந்த பெற்றோர்கள் உங்களைப் பற்றி பெருமைப்பட வேண்டிய ஒரு சிறப்பு தருணம் இது.

நமது தாய்நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இராணுவத்தின் மரியாதைக்குரிய வாளை தங்கள் கைகளில் ஏந்திய பிள்ளையைப் பெற்றிருப்பது பெற்றோருக்கு மிகுந்த பெருமையாகும். இன்று, உங்கள் பெற்றோருக்கு கொடுக்க வேண்டிய அதிகபட்ச மரியாதையையும் மதிப்பையும் நீங்கள் அளித்துள்ளீர்கள். அந்தப் பெற்றோரின் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதன் மூலமும், இந்தத் தொழிலில் இருக்கும் கௌரவத்தையும் மதிப்பையும் பாதுகாப்பதன் மூலமும் நீங்கள் மிகவும் சிறந்த முறையில் பணியாற்றுவீர்கள் என்றும் நான் நம்புகின்றேன்.

மேலும், உங்கள் சிரேஷ்ட அதிகாரிகள் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த சிரேஷ்ட அதிகாரிகள், மிகுந்த அர்ப்பணிப்புடனும், சவாலான காலங்களிலும், இலங்கை இராணுவத்தின் கௌரவம், மதிப்பு மற்றும்

(05ஆம் பக்கம் பார்க்க)





## திஸ்ஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதமே வழங்கப்படுகின்றது. இது பாடசாலை உள்ளிட்ட இடங்களில் வழங்கப்படுவது போன்ற பதவி உயர்வு அல்ல.

அத்துடன் தையிட்டி விகாரைப் பிரச்சினையையும் விகாராதிபதிக்கு வழங்கப்படும் சான்றிதழ் நிகழ்வையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த வேண்டாம்.

தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் குறித்து எனது அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவீடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கமைய, விகாரைக்குச் சொந்தமான காணிகளை விகாரைக்கு வழங்கவும் ஏனைய காணிகளை உரிய மக்களிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது." – என்றார்.






## பொறுப்புகளை...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்முறையைப் பாதுகாத்தனர். அந்த அதிகாரிகளின் மேற்பார்வை மற்றும் சரியான வழிகாட்டுதலின் கீழ், நீங்கள் பயிற்சி பெற்று இன்று அதிகாரிகளாக பதவிகளுக்கு நியமிக்கப்படுகிறீர்கள். இராணுவத் தளபதியும் பிற சிரேஷ்ட அதிகாரிகளும் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலுக்கு அவர்கள் சேர்த்த கௌரவத்தையும் மதிப்பையும் நீங்கள் அதே வழியில் தொடர்ந்து பாதுகாப்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

அரசாங்கத்திற்கும், ஜனாதிபதியாக எனக்கும், உங்கள் மீது பாரிய எதிர்பார்ப்பு உள்ளது. நமது நாடு பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டது. அந்த சவால்களை வெற்றிகொள்ள, இந்த தாய்நாட்டின் பாதுகாப்பு, அமைதி மற்றும் மக்களுக்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த உங்கள் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளனர்.

நீங்களும் நானும் இன்று கால்களை வைத்திருப்பது, கடந்த காலங்களில், வீரச் செயல்கள் மூலம், நமது தாய்நாட்டை விடுவிப்பதற்கான போராட்டத்தில் உயிர்கள் தியாகம் செய்யப்பட்ட பூமியில் ஆகும். எனவே, கைவிட முடியாத ஒரு பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. இலங்கை இராணுவமாக, நமது தாய்நாட்டின் மற்றும் அதன் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அசைக்க முடியாத பொறுப்பு உங்களுக்கு உள்ளது. இந்த விடயத்தில் உங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் உள்ளது.

சூறாவளியினால் நமது நாடு பேரழிவைச் சந்தித்தது. மக்களின் வாழ்க்கை முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. சிலருக்கு உணவு வழங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இன்னும் சிலரது உயிர்களைக் காப்பாற்றுவது ஒரு பெரிய சவாலாக அமைந்தது. அன்றிலிருந்து இன்று வரை, ஒவ்வொரு சவாலிலும் இலங்கை இராணுவம் பெரும் பங்காற்றியுள்ளது. அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகின்றேன். படையினர் மிகவும் கடினமான பணியில் ஈடுபட்டு மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க கடுமையாக உழைத்து வருகின்றனர்.

உங்களுக்கு இருப்பது தொழில் ரீதியான பொறுப்பு மாத்திரமல்ல. பல்வேறு வகையான தொழில்கள் உள்ளன. உங்கள் நண்பர்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு தொழிலுக்கும் அதற்கே உரிய பொறுப்பு மற்றும் மதிப்பு உள்ளது. நீங்கள் மிக உயர்ந்த மதிப்பைப் பெற்றுள்ளீர்கள் என்றும் அதே நேரம் ஒரு பாரிய பொறுப்பு உங்கள் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது என்றும் நான் நினைக்கிறேன்,

நமது தாய்நாட்டை நாம் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். நமது தாய்நாடு பல தரப்பிலிருந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றது. ஒருபுறம், நமது அரச பொறிமுறை பலவீனமாகவும் வீழ்ச்சி அடைந்தும் இருந்த ஒரு சகாப்தம் இருந்தது. நமது பொருளாதாரம் பெரும் சவாலுக்கு உள்ளாகி சரிவடைந்து கொண்டிருந்த ஒரு சகாப்தம் இருந்தது. நமது சமூகத்தின் நல்வாழ்வு முற்றிலுமாக தோல்வி கண்ட ஒரு சகாப்தம் இருந்தது. மனித உறவுகள் பெறுமதியற்ற உறவுகளாக மாறிக்கொண்டிருந்தன. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவு உடையத் தொடங்கியது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவு உடையத் தொடங்கியது. மதஸ்தலங்களுக்கும் நிர்வாக சபைக்கும் இடையிலான உறவு உடையத் தொடங்கியது.

நமது நாடு அனைத்து மனித உறவுகளும் உடைந்த ஒரு சகாப்தத்தில் நுழைந்து கொண்டிருந்தது. அதன்போது நமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு என்ன? நாம் வரலாற்று பாரம்பரியத்தையும் வரலாற்று சாதனைகளையும் கொண்ட ஒரு நாடு. ஆனால் நமது நாடு எல்லா வகையான வீழ்ச்சிகளுக்கும் உள்ளானது. இப்போது நமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு, இந்த தாய்நாட்டை உலகில் உயர்ந்த, மதிப்புமிக்க மற்றும் பாராட்டப்படும் ஒரு நாடாக மாற்றுவதாகும்.

ஒவ்வொருவருக்கும் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் உள்ளன. ஜனாதிபதியாகவும் அரசாங்கமாகவும், நமக்கு ஒரு பொறுப்பு உள்ளது. பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் தேவையான பொறிமுறையைத் தயாரிக்கவும், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்யவும், அரசியலை மக்களின் செல்வத்தை குவிக்கும் ஒரு தொழிலாக அன்றி, மாறாக மக்களுக்கு சேவை செய்யும் ஒரு சமூகப் பணியாக மாற்றும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கும் அதே போன்ற பொறுப்புகள் உள்ளன. இங்கு கூடியிருக்கும் பெற்றோருக்கும் நமது நாட்டுக்கான பொறுப்புகள் உள்ளன. நமது மதஸ்தலங்களுக்கும் பொறுப்புகள் உள்ளன.

ஒருவருக்கொருவர் எதிராகச் செயற்படுவதன் மூலமோ அல்லது ஒருவரையொருவர் சந்தேகத்துடனும் அவநம்பிக்கையுடனும் பார்ப்பதன் மூலமோ இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு

செல்ல முடியாது. நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை முறையாக நிறைவேற்றுவதற்கான உறுதியான தீர்மானத்துடன் நாம் அனைவரும் செயற்பட்டால் மாத்திரமே நாம் ஒரு நாடாக முன்னேற முடியும்.

ஒரு நாடாக நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பை இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்துவோம் என்று நான் உங்களுக்கு உறுதி அளிக்கின்றேன்.மேலும் உங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள் மற்றும் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை முறையாக நிறைவேற்றுமாறு பொதுமக்களையும் நான் அழைக்கின்றேன். நாம் அனைவரும் ஒரே குறிக்கோளுடன் தைரியமாக தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற முடிந்தால், வரலாற்றில் நம் நாடு பெற்ற பெருமை மற்றும் கௌரவத்துடன் தாய்நாட்டை மிக விரைவில் மீண்டும் கட்டியெழுப்ப முடியும். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று அழைப்பு விடுக்கின்றேன்.” – என்றார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, இலங்கை இராணுவ கல்வியியல் கல்லூரியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.ஜே.ஆர்.என். மெதகொட உள்ளிட்ட இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறும் கெடட் அதிகாரிகளின் பெற்றோர் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# இலங்கை பொலிஸுக்கு கிடைத்தன 75,000 சுவாச பகுப்பாய்வு கருவிகள்

இலங்கை பொலிஸ/க்கு 75,000 புதிய சுவாசப் பகுப்பாய்வு கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவை தற்போது நாடு முழுவதும் உள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எஃப்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நிலவிய சுவாசப் பகுப்பாய்வு கருவிகளுக்கான தட்டுப்பாடு இந்த புதிய தொகுதியின் மூலம் நீங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



மேலும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வீதிச் சோதனைகள் மற்றும் விபத்து நடந்த இடங்களிலேயே உடனடி சோதனைகளை முன்னெடுக்க இது உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் “கருவிகள் இல்லாத சமயங்களில் சட்டம் நடைமுறைப் படுத்தப்படாது என்று அர்த்தமல்ல. அத்தகைய சந்தர்ப்பங்களில் சந் தேகநபர்கள் சட்ட மருத்துவ அதிகாரி ஒருவரிடம் முன்னிலைப்படுத்தப் படுவார்கள்.

அங்கு பெறப்படும் மருத்துவ அறிக் கையே நீதிமன்றத்தில் சாட்சியாகப் பயன்படுத்தப்படும்.” என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஃப்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

# பசறை மண்சரிவில் சிக்கி கடந்த 27 ஆம் திகதி காணாமல் போனவரின் உடல் பாகங்கள் மீட்பு

பதுளை – பசறை – ஆக்கரத்தென்ன பகுதியில் கடந்த 27 ஆம் திகதி ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு காணாமல் போயிருந்த ஒருவரின் உடல் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.

ஆக்கரத்தன்ன முதலாம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஒருவரின் உடற்பாகங்களே மீட்கப்பட்டுள் ளன என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த உடல் பாகங்கள் முன்னாள் இராணுவ வீரர் ஒருவருடையது எனவும் அதனை அவரது மனைவி உறு திப்படுத்தியுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்றியிருந்தார்.

நாளை நடைபெறும் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் நான்கு தலைவர் களோடு, சங்கு கூட்டணியின் இரண்டு தலைவர்கள் சந்திப்பார்கள் என முதலில் செய்தி வெளியாகியிருந்த போதிலும், நேற்று அதில் மாற்றம் ஏற்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. செல்வம், சித்தார்த்தன் ஆகியோரோடு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் இம்முறை சந்திப் பில் இடம் பெறுகிறார் எனத் தெரிகிறது.

இந்தச் சந்திப்பில் பங்குபற்றும் வாய்ப்பை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி இழந்திருக்கின்றது. அவர்களது பிரதிநிதிகள் குழு தமிழ கத்தில் நடத்தும் ஈழ ஆதரவுப் பிரசார மும் கஜேந்திரகுமாரை இந்தச் சந்திப் பில் சேர்ப்பதில் இந்தியத் தூதரகம் ஈடுபாடு காட்டாமைக்குக் காரணமாக இருக்க கூடும்.

நாளைய சந்திப்பின்போது மாகாண சபை தேர்தலை மேலும் தாமதிக்காது நடத்துதல், 13ஆம் திருத்தத்தை முழு மையாக நடைமுறையாக்கம் செய்தல், தேசிய இனப்பிரச்சனை தீர்வுக்கான பேச்சுக்களை விரைந்து முன்னெடுத்தல் போன்ற விடயங்களை கொழும்புக்கு வலியுறுத்தும்படி இந்திய வெளிவிவ கார அமைச்சரை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கோருவார்கள் எனத் தெரிகிறது. இது விடயத்தை ஒட்டி தமிழ்க் கட்சித் தலைவர்கள் எல்லோ ரும் ஒப்பமிட்ட கடிதம் ஒன்றை நேரடி யாக இந்திய வெளிவிவகார அமைச் சரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இந்த கடிதத்தில் தமிழரசு கட்சி தலைவர் மற்றும் சங்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஐந்து கட்சிகளின் தலைவர்களும் ஒப்பமிட்டு இருப்பார் கள் என்று கூறப்பட்டது. அந்த ஒப்பங் களைப் பெறும் நடவடிக்கையில் தமிழ ரசுக் கட்சித் தலைவர் சி.வி.கே. சிவஞா னம் நேற்று முனைப்பாக ஈடுபட்டிருந் தார். அதன் ஒரு கட்டமாக கிளிநொச்சி யில் அவர் சமத்துவக் கட்சித் தலைவர் சந்திரகுமாரை சந்தித்திருந்தார். அந்த விடயத்தை சமத்துவக் கட்சி தலைவ ருக்கும் தமிழரசுக் கட்சி தலைவருக்கும் இடையிலான சந்திப்பு என்பது போல சில சமூக ஊடகங்கள் செய்தி வெளி யிட்டிருந்தன.

ஆனால், அது, மேற்படி கடிதத்தில் ஒப்பம் பெறும் நடவடிக்கை மட்டுமே என பின்னர் அறிய வந்தது.

இப்போது கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை தவிர, தமிழ்த் தேசி யத்தை வலியுறுத்தும் தமிழ் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து மகாண சபைத் தேர்தலை வலியுறுத்துவது உட்பட பல விடயங்களை முன் வைக் கும் கடிதத்தை ஒன்று சேர்ந்து வழங்க இருக்கின்றன என்பது முக்கிய விடயமாகும்.

தமிழ் தேசியப் பிரச்சினையில் தமிழ்த் தேசியப் பேரவை மற்ற கட்சிக ளில் இருந்து தனி வழி போகப் போகின் றது என்பது இதன் மூலம் உறுதியாகி இருக்கின்றது எனக் கொள்ளலாம்.

## ஜப்பான்...

அவ்வாறான அணுகுமுறையை நாமும் பின்பற்ற வேண்டும்.”

– இவ்வாறு அமைச்சர் சமந்த வித்யா ரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவிகளை வழங்கிய உலக நாடுகளுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். மீட்பு பணி, மருத்துவ சேவை, விநியோகம் என சகல வழிகளிலும் உதவிகள் கிடைக்கப் பெற்றன.

அடுத்த கட்டமாக மீள் கட்டுமானப் பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான உதவிகளும் கிடைக்கப் பெறும் என்ற நம்பிக்கை உள்ளது.

சுனாமி காலத்தில் இருந்த அரசாங்கம் போன்றது அல்ல தற்போதைய அரசாங் கம். சர்வதேச நாடுகளுக்கு முழு நம் பிக்கை உள்ளது. அதனால்தான் உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

வெளிநாடுகளில் வாழும் இலங்கை யர்களும் நாட்டுக்காக உதவிகளை வழங்கி வருகின்றனர். உதவிகள் முறை யாகமுகாமைத்துவம்செய்யப்படுகின்றன.

ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்ட பின்னர் அந்த நாடு மீண்டெழுந்தது. மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டனர். நாமும் அவ்வாறு செயற்பட வேண்டும். எதிரணிகளும் ஒத்துழைக்க வேண்டும். இலங்கை நிச்சயம் மீண்டெழும் என்ற நம்பிக்கை உள்ளது.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கொடூரச் சட்டம்

இலங்கையில் கடந்த 47 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் மிக மோசமான - கொடூரமான - குரூரமான - மனிதாபிமானமற்ற - காட்டுமிராண்டித்தனமான - சட்டம்தான் 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமாகும்.

ஆரம்பத்தில் தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாகவெ இது கொண்டு வரப்பட்டு, இப்போது எழுத்தாழ அரை நூற்றாண்டு காலம் நிரந்தரமாக அது நடைமுறையில் இருக்கின்றது.

இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் மனிதகுல நாகரீக முறைமைகளுக்கு இயைந்தவை அல்ல என்று அதிகாரத்தில் இருந்த ஆட்சியாளர்களினாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கின்றது.

இந்தச் சட்டத்தின் கொடூரப் போக்கை ஒப்புக்கொண்ட ஆட்சியாளர்கள் அது மாற்றப்பட வேண்டும் என்று நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறார்கள். அது மாற்றப்படக் கூடாது, அடியோடு நீக்கப்பட வேண்டும் என்பதே எதிரணியில் இருந்த காலம் முழுவதும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவினதும் அவரது ஜே.வி.பி. கட்சியினரதும் நிலைப்பாடாக இருந்தது.

அண்மை காலத்தில் அதிகாரத்தை பிடிப்பதற்கு ஜே.வி.பி. முன் வைத்த தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இந்தச் சட்டம் மாற்றீடின்றி நீக்கப்பட வேண்டும் என்றே குறிப்பிடப் பட்டிருந்தது.

ஆனால், வேறு பல அரசியல் விடயங்களில் குத்துக்கரணம் அடித்தமை போல, ஜே.வி.பியை பிரதான தர்ப்பாக கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசும், அதே குத்துக்கரண நிலைப்பாட்டை இந்தச் சட்டம் தொடர்பிலும் பிடித்துக் கொண்டிருக்கின்றது.

முன்னர் மாற்றீடு இன்றி இந்தச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இப்போது பதிலீடு ஒன்றை முன் வைத்திருக்கிறார்.

ஆனால், இப்போது மாற்றீடாகக் கொண்டு வரப்படும் பயங்கரவாத விலக்கல் சட்டம் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைவிட மிக மோசமான - இழிவான - மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்ற - பிரிவுகளை கொண்டிருப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

இதே போல, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மாற்றீடு செய்யும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் முன்னைய நல்லாட்சி அரசின் கீழும் கொண்டுவரப்பட்டது. ஆனால் அநத மாற்றீட்டுச் சட்டத்தின் மோசமான ஏற்பாடுகள் நாடாளுமன்றத்தில் கடும் விமர்சனத்திற்கு உள்ளானமையால் அப்போது அந்த மாற்றீட்டுச் சட்டத்தை நிறைவேற்றும் திட்டமும் கைவிட்டுப் போனது.

இப்போது மீண்டும் மாற்றீட்டுச் சட்டம் பற்றிய ஏற்பாடுகள் குறித்து அதிகம் பிரஸ்தாபிக்கப் படுகிறது.

அந்தச் சட்ட மூலத்தின் நகல் வரைவு நீதியமைச்சின் இணைய தளத்தில் வெளியாகி இருப்பதாகவும் கூறப்படுகின்றது

அந்த மாற்றீட்டுச் சட்டத்தில் உள்ள மோசமான ஏற்பாடுகளுக்கு எதிராக இந்தத் தடவையும் மக்கள் கிளர்ந்தெழுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தகைய எதிர்ப்பு நிலை நீடித்தால் அந்தச் சூழலையே வசதியாகப் பயன்படுத்தி, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குகிறோம் என்ற ஏற்பாடு அடிபட்டுப் போக, இந்தக் கொடூரச் சட்டம் மாத்திரம் நாட்டில் தொடர்ந்து நீடிக்கப் போகின்றது...!

# நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்து 2 வயது குழந்தை உயிரிழப்பு



அரலகங்வில கந்தேகம பகுதியில் நீர் நிரம்பிய குழிக்குள் வீழ்ந்து குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் குழந்தை உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கந்தேகம பகுதியைச் சேர்ந்த 2 வயது குழந்தையே உயிரிழந்துள்ளது.சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கிழக்கு, மத்திய மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யும்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு



கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் பிற்பகல் வேளையில் இடைக்கிடையே மழை பெய்யுமென திணைக்களம் கூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதனிடையே, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் பல பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் மினிப்பே, உடுதும்பர, தொலுவ மற்றும் மெததும்பர பிரதேச செயலக பிரிவுகளுக்கும் நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை, மதுரட்ட, நில்தண்டஹின்ன மற்றும் ஹங்குராங்கெத்த பிரதேச செயலக பிரிவுகளுக்கும் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.




# கம்பஹா - திஹாரிய நகரிலுள்ள வர்த்தக நிலையத்தில் தீ பரவல்

கம்பஹா– திஹாரிய நகரிலுள்ள விற்பனை நிலையமொன்றில் நேற்று பகல் தீ பரவல் ஏற்பட்டது.

மின்விளக்குகள் விற்பனை நிலையமொன்றின் மூன்றாம் மாடியில் தீ பரவியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

2 தீயணைப்பு வாகனங்களை ஈடுபடுத்தி தீயணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொழும்பு – கண்டி வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# இந்த ஆண்டில் இறக்குமதி, ஏற்றுமதி கொள்கலன்களின் அளவு அதிகரிக்கும்

நடப்பாண்டின் பிற்பகுதியில் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மறு ஏற்றுமதி கொள்கலன்களின் அளவு அதிகரிக்கும்எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், துறைமுகத்தின் செயல்பாடுகள் மற்றும் அனுமதி நடவடிக்கைகளில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தற்போது, சுமார் 8,000 கொள்கலன்கள் அனுமதி நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறைந்த ஆபத்துள்ள கொள்கலன்களை துறைமுக அதிகாரசபையால் புளூமெண்டலில் அமைந்துள்ள பிரிவுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுங்கத் துறையின் முழு மேற்பார்வையின் கீழ் அனுமதி நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதன் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய மற்றொரு கலந்துரையாடலை நடத்துவதற்கும் அமைச்சர் அநுர கருணாதிலக்க பணிப்புரை விடுத்துள்ளார் என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

# பரிசளிப்பு விழாவில் அதிபரை கடுமையாக விமர்சித்த மாணவி

கம்பஹாவின் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் அதிபரை கடுமையாக விமர் சனம் செய்யும் வகையில் பேசியமை தற்போது பேசு பொருளாக மாறியுள் ளது.

அந்த மாணவி பரிசளிப்பு விழா மேடையில் அதிபரை கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

மேற்படி மாணவி பாடசாலை சார்பில் பல போட்டிகளில் கலந்து கொண்டு பல ஆண்டுகளாக தாம்



வெற்றிகளை குவித்து வந்தேன் என தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச போட்டிகளிலும் இந்த மாணவி தனது திறமையை வெளிப்படுத்தி இருந்தேன் என்றும் இதன்போது குறிப்பிட்டார்.

பரிசளிப்பு விழாவின் ஒத்திகை ஒன்றுக்கு தாம் வராத காரணத்தினால் அதற்கு தண்டனையாக தமக்கு கிடைக்க வேண்டிய விருதினை அதிபர் தடுத்து நிறுத்தினார் என கூறியுள்ளார்.

விழா மேடையில் பாடசாலையின் அதிபரை விமர்சனம் செய்யும் காணொலி சமூக ஊடகங்களில் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது.

# காற்றின் தரம் வீழ்ச்சியடைந்தது

இலங்கையின் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாணங்களில் கடந்த சில நாள்களாக காற்றின் தரம் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி அஜித் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது காற்றின் மாசடைவு மட்டம் 150 முதல் 200 வரை உயர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது ஆரோக்கியமற்ற நிலையை குறிப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.



எல்லை தாண்டிய வளிமாசு நகர்வு மற்றும் தற்போது தீவிரமடைந்துள்ள வடகிழக்கு பருவக்காற்று ஆகியவற்றின் தாக்கமே இதற்கு முக்கிய காரணமாகும் எனவும் கடந்த ஆண்டுகளிலும் இதே காலப்பகுதியில் இவ்வாறான நிலைமை அவதானிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடு முழுவதும் நிலவும் காற்றின் தரத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபை தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

காற்று மாசுபாட்டினால் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ளவர்கள் (சுவாசக் கோளாறு உள்ளவர்கள், முதியவர்கள் மற்றும் சிறுவர்கள்) இதனால் உடல்நலப் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடலாம் என கலாநிதி குணவர்தன எச்சரித் துள்ளார்.



# போர் பாதிப்பு காரணமாக தண்டுவடம் பாதிக்கப்பட்ட 39 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கிவைப்பு

போர் பாதிப்பு காரணமாக தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள், கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கி வைக்கப்பட்டுள்ளன.

பிரித்தானியாவை தளமாக கொண்டு செயற்பட்டுவரும் ஐ.எல்.சி. வானொலி நேயர்கள் மற்றும் தமிழ் எய்ட் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினரது நிதி உதவியில் வடமராட்சி ஊடக இல்லத்தின் அனுசரணையில் இந்த உதவு செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போர் பாதிப்பு காரணமாக தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களது நல்வாழ்விற்காக செயற்பட்டு வரும் ஒளிமயமான வாழ்வுக்கு உதவும் அறக்கட்டளையின் ஊடாக மாற்றுத்திறனாளிகளாக உள்ள போராளிகள் உள்ளிட்ட 39 குடும்பங்களுக்கு தலா 9,000 ரூபா பெறுமதியான போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளும் பாடசாலை செல்லும் அவர்களின் 16 பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஐ.எல்.சி. வானொலியின் தாயக செய்தியாளரும் யாழ் வடமராட்சி ஊடக இல்ல செயலாளருமான இரா.மயூதரன் ஒழுங்கமைப்பில், கிளிநொச்சியில் உள்ள இடமொன்றில் வைத்து இவை வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது 4 லட்சத்து 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


















# பளையில் இடம் பெற்ற கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(பூ.லின்ரன்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வண்ணாங்கேணி, சஞ்சீவிநகர், ஆராதிநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது கிராம சேவையாளருக்கு எதிரான கவனவீர்ப்பு நடவடிக்கை ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கிராம சேவையாளர் நேரில் சென்று பார்வையிடவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தமது நிலமையைப் பார்வையிடுமாறு தொலைபேசியூடாக கேட்ட குடும்பப் பெண்ணிடம் "சோத்துக்கு வழியில்லாதவர்களுக்கு சாமான் கொடுக்கவில்லை" என கீழ்த்தரமாக ஏசினார் எனவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக பார்வையிட்டு அவர்களுக்கான கொடுப்பனவுகளையும் உதவிகளையும் வழங்குமாறு உத்தரவிடப்பட்டும் தாம் பல வாரங்களாக வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையிலும் கிராம சேவையாளர் தம்மைப் பார்வையிட்டு அனர்த்தம் தொடர்பான எவ்வித பதிவையும் மேற்கொள்ளவில்லை எனவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

தம்பகாமம்,கிளிநொச்சி 86 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்கேணி, சஞ்சீவிநகர், ஆராதிநகர் ஆகிய பகுதிகளில் யுத்தத்தின் பின் மக்கள் படிப்படியாக மீளக்குடியேறினர். அவர்களில் காணியற்ற மக்களுக்கு அரச காணிகள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட காணிகளில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மாரி காலங்களில் மக்களின் வீடுகள் மற்றும் தோட்டக்காணிகளில் வெள்ளம் புகுந்து பிரதேசமே வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது.



இதனால் அன்றாடம் தொழில் செய்யும் வண்ணாங்கேணி, சஞ்சீவிநகர், ஆராதிநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்து வருகிறது.

குழந்தைகள், முதியவர்கள் வசிக்கும் வீடுகளில் இடுப்பிற்கு மேல் வெள்ளம் நிற்பதால் தொடர்ச்சியாக மழைக் காலம் நிறைவடையும் ஐந்து மாதங்கள் வரையும் தாம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியிலுள்ள குளம் ஒன்றொ புனரமைப்புச் செய்து வெள்ளநீர் முறையாக வழிந்தோடுவதற்கு கிராம அமைப்புக்கள் ஒன்றிணைந்து, ஏனைய அரச தரப்புக்களிடம் அனுமதி பெற்ற நிலையிலும் கூட அதற்கு கிராம சேவையாளர் முட்டுக்கட்டை போடுகின்றார் எனவுன் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே இந்த விடயம் தொடர்பில் பொறுப்பான அரசாங்கம் என்ற வகையில் தமக்கு தீர்வினைப் பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கிராம அமைப்புக்கள், கமக்கார அமைப்புக்கள், பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.














# கல்கமுவ விபத்தில் இருவர் உயிரிழப்பு

(உடப்பு க.மகாதேவன்)

அநுராதபுரம் – பாதெனிய பிரதான வீதியின் கல்கமுவ குருந்தன்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியமளவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

ஓட்டோ ஒன்றும் சிறிய லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில், ஓட்டோவின் சாரதியும், அதில் பயணித்த பெண் ஒருவரும் துரதிஷ்ட வசமாக உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த லொறியின் பின்னால் வந்த இன்னுமொரு ஓட்டோவும் லொறியில் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் ஓட்டோ பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.













# வெருகல் பகுதியில் மீண்டும் வெள்ளம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை – வெருகல் பகுதியில் நேற்று அதிகாலை குடியிருப்பு பகுதிக்குள் வெள்ளநீர் புகுந்ததில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர், உறவினர்கள் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மூன்று வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அண்மையில் மத்திய மலைநாட்டில் ஏற்பட்ட அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக கடந்த வியாழக்கிழமை மாலை முதல் மன்னம்பிட்டியின் நீர்மட்டம் உயரத் தொடங்கியது. வெள்ளிக்கிழமை அதிகாலை 4.99 மீற்றர் வரை உயர்வடைந்து பின்னர் குறைவடையத் தொடங்கியது. இதனை அடுத்து வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அப்பகுதியில் இருந்து வெளியேறும் வெள்ள நீர் இரண்டு நாள்களுக்குப் பின்னர் நேற்றைய தினம் வெருகல், கங்குவேலி படுகாட்டுப் பகுதியில் பரவி வருகின்றது.

இதனால் வெருகல் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை கிராமத்தில் 3 வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதுடன் பலருடைய வளவுகளுக்குள்ளும் வெள்ளநீர் பரவியுள்ளது. இதன் காரணமாக பல குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச அலுவலர்கள் நேற்று உடனடியாக களப்பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் கங்குவேலி, படுகாடு மற்றும் கருக்குவயல்பகுதியில் வரம்புகளை மூடி வெள்ளநீர் பரவி வருகின்றது.

எனினும் ஊருக்குள் வெள்ளநீர் உட்புகுவதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மன்னம்பிட்டியில் நீர்மட்டம் உயர்வரைந்து பின்னர் தொடர்ச்சியாக குறைவடைந்து வந்ததன் காரணமாக பாரிய வெள்ள ஆபத்து இல்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.







# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடாக வரும் புதிய சட்டமூலம் மேலும் மோசமானது!

## கடுமையாக எதிர்ப்போம் என்கின்றார் சுமந்திரன்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் அரசாங்கத்தினால் புதிதாக வெளியிடப்பட்டிருக்கும் வரைவில் முன்னைய திருத்தச்சட்டமூலங்களை விடவும் மோசமான விடயங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன எனச் சுட்டிக்காட்டிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்குவதை விடுத்து, அதனைப் பதலீடு செய்வதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை முற்றாக எதிர்க்கவிருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத்தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தியும், அச்சட்டம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கிலும் கடந்த காலங்களில் நாடு முழுவதும் கையெழுத்துப் போராட்டத்தை முன்னின்று நடத்திய ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அதனைப் பதிலீடு செய்யும் வகையில் முன்னர் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் என்பவற்றின் உள்ளடக்கங்களை விடவும் மோசமான விடயங்கள் இப்புதிய வரைவில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன எனச் சுட்டிக்காட்டினர்.



தேசிய மக்கள் சக்தி எதிரணியாக இருந்த வேளையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்படும் அதேவேளை, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பிரத்யேக சட்டமொன்று தேவையில்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தது. அதைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றதே தவிர, பிறிதொரு சட்டத்தின் ஊடாக அச்சட்டம் பதிலீடு செய்யப்படும் எனக் கூறப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் புதிதாகப் பிறிதொரு சட்டத்தைக் கொண்டு வருவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும், ஆகவே அச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கான நடவடிக்கைகளைத் முற்றாக எதிர்ப்போம் என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி நீதியமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய வரைவின் உள்ளடக்கங்கள் மிகமோசமானவையாக இருப்பதாகவும், அவை பற்றி விரிவாக ஆராய்ந்து தமது கரிசனைகளை வெகுவிரைவில் நீதியமைச்சுக்கு அனுப்பிவைக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.





# மாகாணசபைத் தேர்தலை தாமதிக்காது நடத்த வலியுறுத்தும்படி ஜெய்சங்கரைக் கோருவோம்

## தமிழ்த் தலைவர்கள் கூட்டாக ஒப்பமிட்டு கடிதம் வழங்குவர்

தாம் ஆட்சிபீடமேறி ஒரு வருடகாலத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் எனத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த பின்னணியில், இன்னமும் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமை குறித்தும், அதனை நடத்துவதற்கான அழுத்தங்களை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதத்தில் வலியுறுத்துவதற்கு தமிழ்த் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

அதனடிப்படையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை நேரில் சந்திக்கும்போது அந்தக் கடிதத்தைக் கையளிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இக்கடிதத்தில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு பல்வேறு தளங்களிலும் இந்தியா பகிரங்கமாக வலியுறுத்திவரும் நிலையில், அவ்வழுத்தத்தைத் தொடர்ந்து பிரயோகிக்குமாறு கோரவிருப்பதாக தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அதேபோன்று தாம் ஆட்சிபீடமேறி ஒரு வருடகாலத்துக்குள் மாகாணசபைத்தேர்தல் நடாத்தப்படும் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த பின்னணியில், இன்னமும் மாகாணசபைத்தேர்தல் நடத்தப்படாமை குறித்தும், அதனை நடத்துவதற்கான அழுத்தங்களை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்தும் பிரதமர் மோடிக்கான கடிதத்தில் வலியுறுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அதிகாரப்பகிர்வானது அர்த்தமுள்ளதாக அமையவேண்டியதன் அவசியம் குறித்தும் அக்கடிதத்தில் உள்வாங்கப்படும் என சுமந்திரன் குறிப்பிட்டார்.

முன்னதாக குறித்த தினத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியைச் சேர்ந்த 6 கட்சிகளின் தலைவர்கள் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை சந்திப்பதற்கு நேர ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் ஜெய்சங்கரின் இலங்கைக்கான திடீர் பயண ஒழுங்கின் காரணமாக அந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது.







# வவுனியாவில் வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் பலி!

(கி.வசந்தன்)

வவுனியா வீரபுரம் பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் வவு னியா தவசிகுளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பரிதாபமாக சாவடைந்துள்ளார் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித் தனர்.

இந்த இளைஞர் உட்பட சிலர் நேற்று மாலை வவுனியாவில் இருந்து வீரபுரம் பகுதிக்குச் சென்றுள்ளனர். இதன்போது அவர்கள் மீது அந்த பகுதியை சேர்ந்த குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் படுகாயமடைந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின் அங்கிருந்து மேலதிக சிகிச்சை களுக்காக வவுனியா வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் சாவடைந்துள்ளார்.

சம்பவத்தில் தவசிகுளம் பகுதியை சேர்ந்த யோ. அபிசாந் (வயது 19) என்ற இளைஞரே சாவடைந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சிலரை கைது செய்வதற்கான நடவடிக்கையை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண் டுள்ளமையுடன், மேலதிக விசார ணைகளையும் முன்னெடுத்து வருகின் றனர்.

# அச்சுவேலி விபத்தில் ஒருவர் பலி




யாழ்ப்பாணம் புத்தூரில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று பேருடன் வேகமாக வந்த மோட்டார் சைக் கிளில் எதிரே வந்த காருடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் இளைஞர்கள் பலத்த காயங் களுக்குள்ளாகினர். இதில் புத்தூர் மணற் பகுதியை சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

மேலும் ஒருவரின் நிலைமை கவ லைக்கிடமாக உள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

எதிரேமோட்டார்சைக்கிளில்பயணித்த தந்தையும், தாயும் மகனும் சிறு காயங் களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசார ணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் வழிபாடுகள் செய்த பிரதமர் ஹரிணி அமரசூரிய

கிளிநொச்சி மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, மாவட்டத்தின் வரலாற்றுப் புகழ்பெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் கிளிநொச்சியில் நடைபெற்ற பல்வேறு அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன் சார்ந்த நிகழ்வுகளில் கலந்து கொண்ட பிரதமர், அதன் ஒரு பகுதியாக வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்துக்கும் வருகை தந்தார்.

ஆலயத்துக்கு வருகை தந்த பிரதமரை ஆலய நிர்வாகத்தினரும் பொது மக்களும் வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் பிரதமர் பக்திபூர்வமாகப் பங்கேற்றார். வழிபாடுகளைத் தொடர்ந்து, மிகவும் பழமை வாய்ந்த இவ்வாலயத்தின் வரலாற்றுப் பின்னணி, ஐதீகங்கள் மற்றும் ஆலயத்தின் சிறப்புக்கள் குறித்து பிரதமர் மிகவும் ஆர்வத்துடன் கேட்டறிந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதமருடன் இணைந்து, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் கௌரவ உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் ஆகியோரும் வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.











| மகாராஷ்டிரா உள்ளாட்சி தேர்தல் | | |
|---|---|---|
| | நகராட்சி தலைவர் (286) | கவுன்சிலர்கள் (6,859) |
| பாஜக கூட்டணி | 245 | 3,300 |
| காங்கிரஸ் கூட்டணி | 41 | 372 |

■ மகாராஷ்டிரா உள்ளாட்சி தேர்தலில் வாக்குகள் எண்ணும் பணி பல இடங்களில் நேற்று இரவு வரை தொடர்ந்தது. இதனால் கவுன்சிலர் பதவிக்கான இடங்களில் முடிவுகள் வெளியிட தாமதமானது. மாநகராட்சிகளில் மேயர் பதவிக்கான தேர்தல் அடுத்த மாதம் 15-ம் தேதி நடைபெற உள்ளது.

# மகாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக பா.ஜ.க வெற்றி

மகாராஷ்டிராவில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான மகாயுதி கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது.

நகராட்சி கவுன்சில்களில் 286 ல் 245 இடங்களில் இந்த கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. 6,859 கவுன்சிலர் பதவிக்கான இடங்களில் 3,300 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக பா.ஜ.க. உருவெடுத்துள்ளது.

மகாராஷ்டிராவில் 10 ஆண்டுகளுக்கு பிறகு சமீபத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. மாநிலம் முழுவதும் 286 நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகளில் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தல் 2 கட்டங்களாக நடைபெற்றது. முதல் கட்டமாக 264 கவுன்சில்களில் கடந்த 2 ஆம் திகதியும், மற்ற கவுன்சில்களில் கடந்த 20 ஆம் திகதியும் தேர்தல் நடந்தது. வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இதில் பா.ஜ.க, சிவசேனா (ஷிண்டே) மற்றும் அஜித்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சி ஆகிய கட்சிகள் அடங்கிய மகாயுதி கூட்டணி, 286 நகராட்சி கவுன்சில்களில் 245 இடங்களில் வெற்றி பெற்றது. இந்த தேர்தலில் பா.ஜ.க. தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. 75 சதவீத நகராட்சித் தலைவர்கள் பா.ஜ.க. தலைமையிலான மகாயுதி கூட்டணியை சேர்ந்தவர்கள். 134 நகராட்சிகளில் பா.ஜ.க. வேட்பாளர்கள் தலைவர்களாக தேர்வாகியுள்ளனர்.

சிவசேனா (உத்தவ் அணி), காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் (பவார் அணி) ஆகிய கட்சிகள் அடங்கிய மகா விகாஸ் அகாடி கூட்டணி இத்தேர்தலில் கடும் தோல்வியைச் சந்தித்துள்ளது. எனினும், சந்திரபூர் மாவட்டம் பிரம்மபுரி நகராட்சி கவுன்சிலில் தலைவர் பதவிக்கு தேர்தல் நடைபெற்ற 23 இடங்களில் 21 இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியது. பா.ஜ.க, தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார்) தலா ஒரு இடத்தில் வெற்றி பெற்றன. சாங்லி மாவட்டம் உருண் - ஈஸ்வர்பூர் நகராட்சி கவுன்சிலில் 23 தலைவர் பதவிகளை தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார்) கட்சி வென்றது.

6,859 கவுன்சிலர் பதவிக்கான இடங்களில் 3,300 இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. சிவசேனா (ஷிண்டே) அணி 600 இடங்களையும், தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார் அணி) 200 இடங்களையும் வென்றுள்ளது. சிவசேனா (உத்தவ் அணி) 145 இடங்களிலும், காங்கிரஸ் 105 இடங்களிலும், தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார் அணி) 122 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது. மற்ற இடங்களில் வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடந்தது.

கட்சிரோலி நகராட்சி கவுன்சில் தலைவர் பதவி தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் ஸ்ரீகாந்த் தேஷ்முக் 717 வாக்குகள் பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர் சஞ்சய் மந்தவகாடே 716 வாக்குகள் பெற்ற நிலையில், ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார்.தேர்தல் வெற்றி குறித்து மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தெரிவிக்கையில்,

"பிரதமர் மோடி, அமித் ஷா, ஜே.பி.நட்டா ஆகியோர் எங்கள் மீது வைத்த நம்பிக்கையை நிறைவேற்றியதில் மகிழ்ச்சி. பிரச்சாரத்தின்போது, எந்த கட்சியையோ, தலைவரையோ நான் விமர்சிக்கவில்லை. குற்றம்சாட்டவில்லை. அரசின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றி மட்டுமே விளக்கினேன். நான் 100 சதவீதம் நேர்மறையாக பிரச்சாரம் செய்ததற்கு மக்கள் அங்கீகாரம் அளித்துள்ளனர்." என்று கூறினார்.

# டில்லியில் கடும் பனிமூட்டம்: 200 விமானங்கள் தாமதம்!

## ரயில் சேவை பாதிப்பு

டில்லியில் கடும் பனிமூட்டம் காரணமாக விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து இரண்டும் பாதிக்கப்பட்டன. நேற்றைய நிலவரப்படி டில்லி விமான நிலையத்தில் 200 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாகியுள்ளன.

கடந்த சில நாள்களாக வட இந்தியாவில் கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது. நேற்றும் கடும் பனி மூட்டம் நிலவியதால், எதிரில் வரக்கூடிய விமானங்கள் தெரியாத நிலை உருவாகி பல பகுதிகளில் வீதிப் போக்குவரத்து பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. மோசமான வானிலை மற்றும் பனிமூட்டம் காரணமாக டில்லி விமான நிலையத்தில் 200 இற்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் வடக்கு ரயில்வேயால் இயக்கப்படும் 50 இற்கும் மேற்பட்ட ரயில்களும் தாமதமாகியுள்ளன.

இதுகுறித்து இந்திய விமான நிலையங்கள் ஆணையம் வெளியிட்ட அறிவிப்பில்,

"வட இந்தியாவின் சில பகுதிகளில் நிலவும் பனிமூட்டம் காட்சி தெளிவின்மையை உருவாக்குகிறது. இது பல விமான நிலையங்களில் விமானச் செயல்பாடுகளில் தாமதங்கள் அல்லது மாற்றங்களுக்கு வழிவகுக்கும். எனவே, பயணிகள் தங்கள் விமான நிறுவனங்களிடமிருந்து அதிகாரப்பூர்வ வழிகள் மூலம் விமானப் பயணத் தகவல்களைச் சரிபார்க்கவும், விமான நிலையப் பயணம் மற்றும் நடைமுறைகளுக்குக் கூடுதல் நேரத்தை ஒதுக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்"" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் வெளியிட்ட பயணிகளுக்கான ஆலோசனையில்," டில்லி விமான நிலையத்தின் செயல்பாடுகள் இயல்பாகவே தொடர்கின்றன. புதுப்பிக்கப்பட்ட விமான அட்டவணை



ளுக்கு, உங்கள் விமான நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும் அல்லது அதிகாரப்பூர்வ விமான நிலைய வலைத்தளத்தைப் பார்வையிடவும். அனைத்துப் பயணிகளும் பாதுகாப்பான மற்றும் இனிமையான பயணத்தை மேற்கொள்ள நாங்கள் வாழ்த்துகிறோம்." என்று தெரிவிக்கப்பட்டது.

மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) தகவல்களின்படி, டிலியில் நேற்று காலை 7 மணியளவில் ஒட்டு மொத்த காற்றின் தரக் குறியீடு(யுஐஜ) 390 ஆகப் பதிவு செய்யப்பட்டது, இது "மிகவும் மோசமான" பிரிவில் வகைப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் சுவாசம் தொடர்பான பிரச்சினைகளால் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.




# காசாவின் மேற்கு கரையில் ஆக்கிரமிப்பு; துரிதமாகும் இஸ்ரேலிய குடியேற்றங்கள்

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காசாவின் மேற்கு கரையில் 19 புதிய யூத குடியிருப்புகளை நிறுவுவதற்கு இஸ்ரேலிய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் நிறுவப்பட்ட புதிய குடியிருப்பு பகுதிகளின் எண்ணிக்கை 69 ஆக உயர்ந்துள்ளது.

காசா முனை மற்றும் மேற்கு கரை என இரு பகுதிகளாக பலஸ்தீனம் அமைந்துள்ளது.

மேற்கு கரையில் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வரும் இஸ்ரேல், உலக எதிர்ப்புகளை மீறி மேற்கு கரையில் புதிய குடியிருப்புகளை அமைத்து வருகிறது.

இந்த புதிய குடியேற்றங்களில் 2005 ஆம் ஆண்டு விலகல் திட்டத்தின்போது வெளியேற்றப்பட்ட இரண்டு குடியேற்றங்களும் அடங்குகின்றன.

இதனையடுத்து புதிய குடியிருப்பு பகுதிகளின் மொத்த எண்ணிக்கை 69 ஆக உயர்ந்துள்ளது.

அதேநேரம் கடந்த 2022 ஆம் ஆண்டு மேற்கு கரையில் 141 ஆக இருந்த யூத குடியிருப்பு எண்ணிக்கை, தற்போது 210 ஆக உயர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




# சுவிட்சர்லாந்து தேசிய பேரவையின் துணை தலைவராக இலங்கை பெண்

சுவிட்சர்லாந்து தேசிய பேரவையின் இரண்டாவது துணைத் தலைவராக இலங்கை வம்சாவளி பெண் ஃபரா ரூமி அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் ஆரம்பத்தில் அவர் உத்தியோகபூர்வமாக அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

இதற்கு முன்னர், அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவும், சுகாதாரத் துறை சார்ந்த குழுக்களில் தீவிரமாகவும் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஃபரா ரூமி, சுவிட்சர்லாந்து நாடாளுமன்றத்தின் கீழ் சபையான தேசிய பேரவையின் இரண்டாவது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தேசிய பேரவையின் இரண்டாவது துணைத் தலைவர் எனப்படுவது சுவிட்சர்லாந்தில் உயரிய பதவியாகும்.



இவர் 1991 டிசம்பர் 28 அன்று இலங்கையின் கொழும்பில் பிறந்தார்.

தனது 6 ஆவது வயதில் பெற்றோருடன் சுவிட்சர்லாந்துக்கு குடிபெயர்ந்தார்.

2021 ஆம் ஆண்டு சோலோத்தர்ன் மாகாண சபைக்கு முதல் முறையாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்து அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

2023 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் மூலம் சுவிட்சர்லாந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்வான முதல் இலங்கை வம்சாவளி நபர் என்ற பெருமையைப் பெற்றார்.

தற்போது நாடாளுமன்றத்தின் இரண்டாவது துணைத் தலைவராக மிக உயரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேலும் ஃபரா ரூமி எதிர்வரும் 2028 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தின் நாடாளுமன்றத் தலைவராகப் பொறுப்பேற்பதற்கான வழி இதன் மூலம் உறுதியாகியுள்ளது.

சுவிட்சர்லாந்து போன்ற ஒரு நாட்டில், புலம்பெயர்ந்த பின்னணியைக் கொண்ட ஒரு பெண் இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தகைய உச்சத்தை அடைந்திருப்பது சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -22.12.2025




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம் பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




யாருக்காக நீங்கள் பாடுபடுகிறீர்களோ அவர்களே உங்களை புரிந்து கொள்ளாமல் மனம் நோகும்படி நடந்து கொள்வார்கள். மிக கவனமாக செயல்பட வேண்டிய காலம். சின்ன சின்ன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. சந்திர பகவான் நல்லது கெட்டது என கலந்து இந்த வாரத்தில் உங்களுக்கு பலனை கொடுப்பார். திட்டம் போட்டு செய்யும் தொழிலில் சில சறுக்கள் ஏற்படலாம். ஆசை வார்த்தை காட்டும் நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம். அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள ஆடம்பரமாக செலவு செய்வீர்கள். எதிர்பார்த்த இடத்தில் தாமதம் இன்றி பணம் கிடைக்கும். தொழில் வேகமாக வளர்ச்சி அடையும். குடும்பத்தில் உங்கள் திறமையை காட்ட முயற்சி செய்தால் மனைவி கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்கு சென்று விடுவார். பணத்தட்டுப்பாடு தலைக்கு மேல் போகும் நேரம் இது. முயற்சிகளுக்கு இருந்த முட்டுக்கட்டைகள் தானாக விலகும்.




பூர்வீக சொத்தில் சகோதர சகோதரிகளால் வில்லங்கம் உண்டாகும். அதை நிவர்த்தி செய்வதற்காக நீதிமன்றத்தை நாடி செல்வதற்கான கட்டாயம் ஏற்படும். உலவுகின்ற நிலவும் உங்களுக்கு அனுசரணையாக இல்லாததால் எதிர்பாராத செலவுகள் வந்து கையில் இருந்த காசுக்கு வெடி வைக்கும். ெ தொழில் துறைகள் சீராக நடக்கும். வியாபாரத்தில் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாத நிலை உண்டாகும். உறவினர் வகையில் ஏதாவது வில்லங்கம் வந்து மன அமைதியை கெடுக்கும். எப்படிப்பட்ட இடையூறுகள் தொழிலில் ஏற்பட்டாலும் அதை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். அரசாங்க ஒப்பந்த வேலைகளில் கால தாமதமாகும். நண்பர்களின் உதவியால் வெளிநாடு செல்வீர்கள். எதிர்பாராத பண வரவு திக்குமுக்காட வைக்கும். ஆன்மீகப் பெரியோர்களின் சந்திப்பு குடும்பத்தில் அமைதியை கொண்டு வரும்.




நடந்து செல்லும் இடமெல்லாம் நந்தவனமாக பூத்து சிரிக்கும் காலம் இது. எந்த தொழிலை தொட்டாலும் ஏற்றத்தை கொடுக்கும். உங்களின் செல்வாக்கும் புகழும் வெளியிடங்களில் கொடி கட்டி பறக்கும். நினைத்ததை நடத்தி முடிப்பதற்கு உறவினர்களும் நண்பர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். சந்திர பகவான் வியாபார வெற்றிக்கு உறுதுணையாக நிற்கிறார். விவசாய தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள். வழக்கறிஞர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள் தங்களுடைய புகழை நிலை நாட்டுவார்கள். வேலை தேடியவர்களுக்கு நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் இருந்த தடைகள் அகலும். சுப காரியங்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வீட்டில் விருந்த நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி பொங்கு வழியும். அரச ஆதரவு புதிய ஒப்பந்தங்கள் பெறுவதற்கு வழிவகுக்கும். அழகு பொருள் விற்பனை செய்பவர்கள், அலங்கார துறையினர் பொருளாதார முன்னேற்றம் அடைவார்கள்.




பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த இரவு பகலாக உழைப்பீர்கள். புதிய முதலீடுகள் மூலம் தொழிலை விரிவுபடுத்தி உற்பத்தி பெருக்கத்தை உண்டு பண்ணுவீர்கள். சந்திரனின் இடப்பெயர்ச்சிகள் சிறப்பான பலன்களையே தரப்போகின்றன. பழைய கடன்கள் மள மள என்று வசூல் ஆகும். சிறு வியாபாரிகள் அபிரிமிதமான லாபத்தை பார்ப்பார்கள். அலங்கார பொருள் விற்பனை அமோக பலனை கொண்டு வரும். கலைத்துறையினருக்கு பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்தும். வெளிநாட்டில் தங்கள் திறமையை காட்டி பெரிய லாபத்தை அடைவார்கள். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் தொழிலில் சாதனை படைப்பார்கள். பிள்ளைகள் படிப்பில் அக்கறை காட்டி பெற்றோரை பெருமைப்படுத்துவார்கள். எதிர்ப்புகளை இருந்த இடம் தெரியாமல் செய்வீர்கள்.




கூட இருந்தே உங்களை கெடுக்க நினைத்த உறவினர்களின் உள் நோக்கத்தை இந்த வாரத்தில் தெளிவாக புரிந்து கொள்வீர்கள். அவர்களிடம் இருந்து விலகி இருப்பது மிகவும் நல்லது. சந்திரனின் இடப்பெயர்ச்சியும் அவ்வளவு சாதகமான நிலையில் இல்லை. முதலீட்டுக்கு தகுந்த வருமானம் கிடைப்பது சற்று சிரமம்.

புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். பதவி உயர்வு கிடைக்கும். நடைபாதை வியாபாரிகள் சிறப்பான பலனை அடைவார்கள். கலை துறையினர் பிரபலமடைவார்கள். கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள். தாய் வழி சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. எவ்வளவு தான் இணக்கமாக நடந்தாலும் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் தாண்டவம் ஆடும். வாக்கு கொடுத்தால் கண்டிப்பாக அதை காப்பாற்ற வேண்டும்.




உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணும் கூட்டம் உங்களுக்கு ஆசை வார்த்தை சொல்லும். அதில் மயங்கி இருப்பதை இழந்து விடாதீர்கள். வளர்பிறை சந்திரன் நீங்கள் செய்யும் வியாபாரத்துக்குப் பல வகையில் உதவியாக இருப்பார். இரு மடங்கு எச்சரிக்கையோடு எதையும் செய்யுங்கள். நல்ல நண்பர்களே விரோதியாக மாறி தொழிலுக்கு இடையூறு செய்வார்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழிலை சிறப்புடன் நடத்துவீர்கள். வேலைக்காக நீங்கள் செய்திருந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் சுணக்கம் உண்டாகும். அலைச்சல் அதிகமாகி உடல் சோர்வு உண்டாகும். கொடுத்த இடத்தில் பணம் திரும்பி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். ஏதாவது வீட்டுச் செலவு வந்து பொருளாதார சிக்கலை உண்டாக்கும். வியாபாரம் மந்தமான நிலையில் நடக்கும். குடும்பத்தில் குழப்பமான நிலையே காணப்படுகிறது.




செலவுகளை கட்டுப்படுத்த எவ்வளவு முயற்சி செய்தாலும் அதில் உங்களுக்கு தோல்விதான் கிடைக்கும். புதிதாகத் தொடங்கும் தொழிலுக்கு நண்பர்களின் உதவி தாராளமாக கிடைக்கும். போட்டி போட்டு தொழிலில் வெற்றி கண்டு எதிரிகளை பொறாமைப்பட வைப்பீர்கள். போட்டி பந்தயங்களில் மிகப்பெரிய லாபத்தை அடைவீர்கள். சொந்த பந்தங்களால் மனச்சங்கடம் அடைவீர்கள். கலைத்துறையினருக்கு பொற்காலம். சனி 7 ஆம் வீட்டில் இருக்கிறார். துணி வியாபாரிகள் துணிவோடு தொழிலில் இறங்கி அதிக மேன்மை அடைவார்கள். உங்களின் வளர்ச்சியை கண்டு எதிரிகள் வாயடைத்து நிற்பார்கள். தேவையில்லாத செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரத்திற்கு இடையூறாக இருந்த வில்லங்கங்கள் விலகும்.

# இன்றைய ராசி பலன்கள் -22.12.2025




துணிச்சலுடன் தொழிலை மேம்படுத்துவீர்கள். வளர் நிலவின் வசந்த ஒளி உங்கள் வாழ்க்கை பாதையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். இழுபறியாக இருந்த இடப்பிரச்சனையை புத்திசாலித்தனமாக தீர்ப்பீர்கள். தாய் மாமன் வகையில் சில சங்கடங்கள் வரலாம். உறவினர்களுடன் ஒருமைப்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள். நினைத்த காரியத்தை நண்பர்களில் உதவியோடு சிறப்பாக முடிப்பீர்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழில் மிகுந்த லாபத்தை கொடுக்கும்.

ஏதாவது ஒரு பிரச்சனை குடும்பத்தில் உருவாகி மன நிம்மதியை கெடுக்கும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்க விருந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள். நீண்டகால மனக் கவலை உங்களை விட்டு நீங்கும். புதிய உறவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.




பொருளாதாரத்தில் எதிர்பார்த்த வெற்றியை அடைந்து பூரிப்புக் கொள்வீர்கள். நீண்ட காலமாக இழுவையில் இருந்த வழக்கை முடித்து வைப்பீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில முன்னேற்றமான பலன்களை கொண்டு வரும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வியாபாரத்தில் பல வெற்றிகளை அடைவீர்கள்.

பிள்ளைகள் படிப்பில் அதிக அக்கறை காட்டுவார்கள். கல்வி செலவு அதிகரித்து கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். உறவினர்களும் நண்பர்களும் உதவிகரமாக இருப்பார்கள். மனம் விட்டு பேசி குடும்ப பிரச்சினையைத் தீர்ப்பீர்கள். காதல் கைகூடி வந்து நீண்ட காலக் கனவு நிறைவேறும்.

கடல் கடந்து பயணம் செல்லக் கூடிய வாய்ப்பை நண்பர் ஏற்படுத்தித் தருவார். எதிர்பாராத தன வரவு உண்டாகும்.




உடைந்து போன உறவுகளை ஒட்ட வைப்பதற்காக பாடுபடுவீர்கள். மனைவியின் தேவையறிந்து நடந்து கொண்டு மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆடம்பரமாக செலவு செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். தொழிலுக்கு இருந்த இடையூறுகளை தகர்த்து எறிவீர்கள். வேலை இடத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வீட்டில் மங்கல காரியங்கள் சிறப்பாக நடக்கும். கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் கவனமாக இருங்கள். படித்துப் பார்த்து பத்திரங்களில் கையெழுத்து போடுங்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பொருளாதாரம் முன்னேற்றம் காண்பீர்கள். பிள்ளைகளால் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டிவரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள்.




எதிர்ப்புகளை முறியடித்து தொழிலை நிலைப்படுத்த முனைப்போடு செயல்படுவீர்கள். கூட்டுத் தொழிலில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டுவீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில நேரங்களில் பாதகமான நிலையை ஏற்படுத்தலாம். பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். செவ்வாய் 7ஆம் இடத்தில் இருக்கிறார்.

உங்கள் எண்ணப்படி திருமண விடயம் சுலபமாக நடக்காது. சுக்கிரன் 5 ஆம் வீட்டில் இருக்கிறார். கலைத்துறையினர் சில சிரமங்களை சந்திக்க வேண்டிவரும்.

கட்டுமான தொழில் கை கொடுத்து தூக்கிவிடும். இரும்பு சம்பந்தப்பட்ட வியாபாரங்கள் அமோகமாக நடக்கும். ராகு ராசியிலேயே அமர்ந்திருக்கிறார். மனைவி மக்களின் போக்கு மனதை காயப்படுத்தும். பொறுமையாக நடந்து கொள்ளுங்கள்.

# வவுனியாவில் பெண் கழுத்தறுத்துக் கொலை கைதான கணவன் யாழ் வைத்தியசாலைக்கு



(கி.வசந்தன்)

வவுனியா, கருவேப்பங்குளம் பகுதியில் குடும்ப பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அவரது கணவன் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவேப்பங்குளம் பகுதியில் 37 வயதுடைய குடும்ப பெண் ஒருவர் கழுத்து பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதன்போது கணவனைப் பொலிஸார் கைது செய்ய முற்பட்ட போது அவர் கழுத்துப் பகுதியில் கத்தியால் குத்தி மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டார். பின்னர் அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இந்தச் சம்பவம் தொடர்பில் கணவன் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர் பொலிஸ் பாதுகாப்புடன் மேலதிக சிகிசசைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு இட மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற நீதிவான் சடலத்தை உடற் கூற்று பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிட்டார்.

தடவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.